بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *05/01/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ வக்ஃபே ஜதீத் சந்தாவின் 66 ஆவது ஆண்டில் ஜமாஅத் மக்கள் முன்வைத்த பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பு மற்றும் 67 ஆவது ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு**
**✪ பாலஸ்தீனத்தில் அநீதிக்குள்ளாக்கப்பட்டுள்ளவர்களுக்காக துஆவிற்கான தொடர் வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

یٰۤاَیُّہَا الَّذِیۡنَ اٰمَنُوۡا ہَلۡ اَدُلُّکُمۡ عَلٰی تِجَارَۃٍ تُنۡجِیۡکُمۡ مِّنۡ عَذَابٍ اَلِیۡمٍ ۝۱۱ تُؤۡمِنُوۡنَ بِاللّٰہِ وَ رَسُوۡلِہٖ وَ تُجَاہِدُوۡنَ فِیۡ سَبِیۡلِ

اللّٰہِ بِاَمۡوَالِکُمۡ وَ اَنۡفُسِکُمۡ ؕ ذٰلِکُمۡ خَیۡرٌ لَّکُمۡ اِنۡ کُنۡتُمۡ تَعۡلَمُوۡنَ ۝۱۲ یَغۡفِرۡ لَکُمۡ ذُنُوۡبَکُمۡ وَ یُدۡخِلۡکُمۡ جَنّٰتٍ تَجۡرِیۡ مِنۡ تَحۡتِہَا

الۡاَنۡہٰرُ وَ مَسٰکِنَ طَیِّبَۃً فِیۡ جَنّٰتِ عَدۡنٍ ؕ ذٰلِکَ الۡفَوۡزُ الۡعَظِیۡمُ ۝۱۳

இந்த வசனங்களின் பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! வேதனையளிக்கக்கூடிய ஒரு தண்டனையிலிருந்து உங்களைக் காப்பாற்றும் வாணிபம் ஒன்றைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும், நம்பிக்கை கொண்டு உங்கள் பொருள்களையும், உங்கள் உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் வழியில் கடுமையாக உழைப்பதே (அந்த வாணிபம்) ஆகும். நீங்கள் அறிந்திருப்பின், இது உங்களுக்கு மிகச்சிறந்ததாகும். (நீங்கள் அவ்வாறு செய்தால்) அவன் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களை சுவர்க்கங்களில் நுழையச் செய்வான். அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடுகின்றன. சுவர்க்கங்களிலுள்ள தூய்மையானதும் இன்பமானதுமான இருப்பிடங்களில் (அவன் உங்களை அமர்த்துவான்). இது (அவன் உங்களுக்கு அளிக்கும்) மாபெரும் வெற்றியாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்: நானும் மூஸவிய்ய மஸீஹின் அடிச்சுவட்டில் அனுப்பப்பட்டுள்ளேன். எவ்வாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கருணை மற்றும் மன்னிப்பின் போதனையை வழங்கினார்களோ அவ்வாறே நானும் கருணை, மன்னிப்பு, சமரசம் மற்றும் சமாதானம் எனும் இஸ்லாமிய போதனையுடன் முஹம்மதிய்ய மஸீஹாக அனுப்பப்பட்டுள்ளேன்.....இந்தக் காலம் இப்பொழுது திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்புவதற்கான காலமாகும். இப்பொழுது வாளைக் கொண்டு போர் புரியும் காலமல்ல. ஆனால், இஸ்லாமிய போதனையைப் பரப்புவதற்காக எழுதுகோலால் செய்யப்படும் போர் மற்றும் தப்லீக் எனும் போர் ஆகியவை தொடர்கின்றன.

இஸ்லாத்தின் துவக்கத்தில் தியாகங்களுக்கான தேவை இருந்தது போன்றே இந்தப் போரைத் தொடரச் செய்வதற்காகவும் உயிர், பொருள், நேரம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. இந்தக் காலத்தில் சமூக ரீதியில் மேன்மையைப் பெறுவதற்காக உலகத்தில் மிகவும் அதிகமாக முயற்சி செய்யப்படுகிறது. மார்க்கத்தையோ இந்த மக்கள் மறந்து விட்டார்கள். உலகத்தின் பக்கம் அதிகம் ஆர்வம் கொள்கிறார்கள். வாணிபங்களில் மேன்மையையும் உலக சுகபோகங்களையும் பெறுவதற்காக உலகம் தனது கவனத்தை எல்லைக்கே கொண்டு போவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இத்தகைய நிலையில் மார்க்கத்தைப் பரப்புவதற்காகத் தியாகங்கள் செய்வதே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியும் வெற்றிகரமான வாணிபமும் ஆகும். இதைத்தான் எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த வசனங்களில் கூறியிருக்கிறான்.

எனவே, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமான இந்தக் காலத்தில் குறிப்பாக, பொருள் தியாகம் ஒரு முக்கியமான பணியாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். ஓரிடத்தில் கூறுகிறான்: உங்களுக்கு என்ன ஆயிற்று! நீங்கள் ஏன் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதில்லை. இவ்வாறே, இதையும் கூறியுள்ளான்: அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். மேலும், உங்களுடைய கைகளாலேயே உங்களை அழிவில் இட்டுக் கொள்ளாதீர்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் யாருக்கும் கடன் வைத்திருப்பதில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ் உலகம் மற்றும் மறுமையின் பலன்களுக்கு வழிவகுக்கக்கூடிய வாணிபத்தைப் பற்றி தெரிவித்துள்ளான். நல்ல நிய்யத்துடன் அவன் வழியில் செய்யப்பட்ட தியாகத்தை எல்லாம்வல்ல இறைவன் பன்மடங்கு அதிகரித்து திருப்பித் தருகிறான். இதைத்தான் அவன் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

இன்று எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் தான் மார்க்கத்திற்காகப் பொருள் தியாகம் செய்வதன் முக்கியத்துவத்தைப் புரிகிறார்கள். ஏழை மக்களின் சாதாரண தியாகங்களை எல்லாம்வல்ல அல்லாஹ் எவ்வாறு கனி தரச்செய்கிறான் என்பதற்கு ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் சாட்சிகள் ஆகும். இது போன்ற உதாரணங்களை நான் அவ்வப்போது எடுத்துரைத்து வருகிறேன். இன்றும் எடுத்துரைப்பேன். இந்த உதாரணங்கள் வசதிபடைத்த அஹ்மதிகள் அவர்களுடைய தரம் என்ன என்று பார்ப்பதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டக்கூடியவையாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘பாதி பேரீத்தம் பழத்தைக் கொடுத்தாவது நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்!. இவ்வாறே கூறினார்கள்: கருமித்தனத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். இந்தக் கருமித்தனம் தான் முந்தைய சமுதாயங்களை அழித்தது. ஹுஸூர் (ஸல்) அவர்களின் சஹாபா பெருமக்களின் நிலையோ எப்படி இருந்தது என்றால், எப்பொழுது ஒரு பொருள் தியாகம் அறிவிக்கப்பட்டாலும் சரி, கூலி வேலை செய்ய புறப்பட்டு விடுவார்கள். என்ன சம்பாதிப்பார்களோ அதை அல்லாஹ்வின் வழியில் சமர்ப்பித்து விடுவார்கள்.

இது போன்றே கலப்பற்ற மக்களை எல்லாம்வல்ல அல்லாஹ் ஹுஸூர் (ஸல்) அவர்களின் உண்மை தொண்டரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் வழங்கியுள்ளான். இது போன்ற எண்ணற்ற நிகழ்வுகளால் அஹ்மதிய்யத்தின் வரலாறு நிறைந்து கிடக்கிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் தியாகம் செய்த இந்த மக்களின் கலப்பற்ற தன்மையை வீண் போகவிடவில்லை. எனவே, அந்த சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) மற்றும் தியாகம் செய்தவர்களின் சந்ததிகளையும் நினைவில் கொள்ள வேண்டும். ஏனென்றால், எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு என்ன வழங்கியிருக்கிறானோ இது அந்த சான்றோர்களின் தியாகங்களின் கனிகளாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் பெரும்பான்மை இன்று தியாகம் செய்யக்கூடியதாகும். ஆப்பிரிக்காவிலும் இத்தகைய உதாரணங்கள் இருக்கின்றன. பாக்கிஸ்தானிலும் உள்ளன. இந்தியாவில் இருந்தும் இது போன்ற உதாரணங்கள் முன் வந்த வண்ணம் இருக்கின்றன.

*சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மத்திய ஆப்பிரிக்க குடியரசு, கஸாகிஸ்தான், கிர்கீஸ்தான், ஃபிலிப்பைன், கேம்ரூன், தன்ஸானியா, டோகோ, இந்தோனேஷியா மற்றும் ஆஸ்ட்ரேலியா உட்பட உலகத்தின் பல்வேறு நாடுகளின் கலப்பற்ற மக்களின் வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை எடுத்துக் கூறினார்கள். இதன் தொடர்ச்சியாகவே கூறினார்கள்:*

இந்தியாவின் சவந்த்வாடியின் ஓர் அஹ்மதி சிராஜ் சாஹிப் ஆவார். அவர் கூறினார்: 'நான் பொருள் தியாகத்தின் அருள்களை என் கண்களால் கண்டேன். கோவிட் நோய் காரணமாக வக்ஃபே ஜதீதின் சந்தாக்கள் பாக்கி இருந்து விட்டன.' இரண்டு மூன்று ஆண்டுகளாக இவருடைய தோட்டத்தின் மரக்கட்டைகள் மழைத் தண்ணீரால் வீணாகிக் கொண்டிருந்தன. இவர் வாங்குபவரைத் தேடிக் கொண்டிருந்தார். யாரும் கிடைக்கவில்லை. இவர் கூறுகிறார்: வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் வந்த போது, சந்தா கேட்ட போது இவர் உடனடியாக 2000 ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டார்.

இவர் கூறுகிறார்: எந்த வாடிக்கையாளர் விலை நிர்ணயித்த பிறகும் பொருளை வாங்காமல் இருந்தாரோ அவர் இரண்டு நாள்களுக்குள் தீடீரென்று வந்து 20,000 ரூபாயைக் கொடுத்து எல்லாப் பொருள்களையும் எடுத்துச் சென்று விட்டார். இவர் கூறுகிறார்: எனது ஈமான் இதுவே ஆகும். அதாவது, சந்தாவின் அருளால் எல்லாம்வல்ல அல்லாஹ் இரண்டாயிரத்தை அதிகரித்து 20,000 ஆக எனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டான். இல்லையென்றால், எந்தப் பொருள் பல ஆண்டுகளாக வீணாகிக் கொண்டிருந்ததோ அது பின்னரும் வீணாகியிருக்கலாம்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகம் முழுவதிலிருந்தும் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பொருள் தியாகத்தின் சம்பவங்களை எடுத்துக் கூறிய பிறகு கூறினார்கள்:* எத்தகைய அழகான கலப்பற்ற மக்களை உலகின் ஒவ்வொரு மூலையிலும் எல்லாம்வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். இது ஒரு நீளமான பட்டியல் ஆகும். யாரைப் பற்றிக் கூறுவது யாரைப் பற்றி விடுவது என்பது எனக்குக் கஷ்டமாக இருந்தது. எவர்களின் சம்பவங்களை என்னால் எடுத்துக் கூறமுடியவில்லையோ அவர்களுடைய கலப்பற்றதன்மையிலும், நன்றியுணர்விலும் எந்தக் குறையும்

இல்லை. இந்த மக்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இந்த தியாகங்களை செய்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** எனவே, நீங்கள் உங்களுடைய தூய செல்வங்களிலிருந்து மார்க்கத் திட்டங்களுக்காக உதவி வழங்கிடுங்கள் என்பதற்காக நான் ஆயத்தமாக நிற்கிறேன். மேலும், ஒவ்வொரு நபரும் எதுவரை எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு வசதியையும், ஆற்றலையும், சத்தியையும் வழங்கியுள்ளானோ அவர் இந்த வழியில் தயங்க வேண்டாம். எல்லாம் வல்ல அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களை விடத் தம்முடைய செல்வங்களை முதன்மை வாய்ந்ததாகக் கருத வேண்டாம். பிறகு, நான் என்னால் இயன்ற அளவுக்கு நூல்கள் எழுதுவதன் மூலமாக, எல்லாம் வல்ல இறைவனின் தூய ஆன்மா எனக்கு வழங்கிய ஞானங்களையும் பரக்கத்துகளையும் ஆசியா மற்றும் ஐரோப்பாவின் நாடுகளில் பரப்பக்கூடும்.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வக்ஃபே ஜதீதின் 66 வது ஆண்டின் சில தரவுகளையும் 67 வது ஆண்டு துவங்கியதற்கான அறிவிப்பை செய்தவாறும் கூறினார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் நிகழாண்டில் **1,29,41,000** (ஒரு கோடியே இருபத்தி ஒன்பது லட்சத்து நாற்பத்தி ஓராயிரம்) பவுண்ட் பொருள் தியாகம் செய்துள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட **7,18,000** (ஏழு லட்சத்து பதினெட்டாயிரம்) பவுண்ட் அதிகமாகும்.

இவ்வாண்டு ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் முதலிடத்தில் பிரிட்டன் உள்ளது. பிறகு கனடா உள்ளது. கனடாவும் நன்றாக அதிகரித்துள்ளது. இவர்கள் கலந்து கொள்பவர்களை அதிகரிக்கச் செய்துள்ளார்கள். இது இவ்வாண்டு இவர்களின் மிகப் பெரும் சிறப்பாகும். பிறகு, மூன்றாவது இடத்தில் ஜெர்மனி உள்ளது. பிறகு, நான்காவது இடத்தில் அமெரிக்கா உள்ளது. அடுத்து, பாகிஸ்தான், இந்தியா, ஆஸ்திரேலியா, மத்தியக் கிழக்கு நாடுகளின் ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா, பிறகு, மீண்டும் மத்தியக் கிழக்கு நாடுகளின் ஒரு ஜமாஅத் மற்றும் பெல்ஜியம்.

ஆப்பிரிக்க ஜமாஅத்களில் முதல் இடத்தில் மொரீஷியஸ் உள்ளது. அடுத்து கானா உள்ளது. அடுத்து புர்கீனாஃபாஸோ. புர்கினாஃபாஸோவின் நிலைமைகளும் மிகவும் மோசமாக உள்ளன. ஆனால், அப்படியிருந்தும் ஆப்பிரிக்காவில் மூன்றாவது இடத்தை வகித்துள்ளார்கள். அடுத்து தன்ஸானியா உள்ளது. நைஜீரியா, லைபீரியா. பிறகு கேம்பியா, மாலீ, யுகண்டா மற்றும் சிராலியோன்.

கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை **15,50,000** ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் இவ்வாண்டு புதிய கலப்பற்ற மக்கள் **44,000** பேர் இணைந்துள்ளார்கள். கலந்து கொள்பவர்களை அதிகரிக்கச் செய்ததில் கனடா முதலிடத்தில் உள்ளது. பிறகு, தன்ஸானியா, கேம்ரூன், கேம்பியா, நைஜீரியா, கினீ பஸாவோ மற்றும் காங்கோ கின்ஸாஷா.

இந்தியாவின் பத்து மாநிலங்களில் முதலிடத்தில் கேரளா உள்ளது. பிறகு தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, கர்நாடகம், ஒடீஷா, பஞ்சாப், மேற்கு வங்காளம், தில்லி மற்றும் மகாராஷ்ட்ரா.

வசூல் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகளில் முதலிடத்தில் ஹைதராபாத் உள்ளது. அடுத்து கோயம்புத்தூர், காதியான், கோழிக்கோடு, மஞ்சேரி, பெங்களூர், மேலப்பாளையம், கொல்கத்தா, கருளாயீ மற்றும் கேரங்க்.

**எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்கள் அனைவரின் செல்வங்களிலும், ஆன்மாக்களிலும் அளவற்ற பரக்கத் ஏற்படுத்துவானாக!**

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பாலஸ்தீனத்துக்காகவோ நான் துஆவுக்காகக் கூறிக் கொண்டேதான் இருக்கிறேன். இப்பொழுதும் இவர்களை நினைவில் கொள்ளுங்கள். தத்தமது மக்கள் வட்டாரத்தில் இவர்களுக்கு சாதகமாக குரலும் எழுப்பி வாருங்கள் என்று நான் முன்னரும் கூறினேன். மக்களுக்கு, குறிப்பாக, அரசியல்வாதிகளுக்குக் கூறிக் கொண்டே இருக்கவும் செய்யுங்கள்.

இஸ்ரேல் அரசோ தன்னுடைய அநீதிகளை விட்டுத் திருந்துவதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்வதாயின், இப்பொழுதோ இவர்கள் இராணுவத்தினருக்கு 2024 ஆம் ஆண்டும் போருக்கான ஆண்டாகும் என்று தெரிவித்துள்ளார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் பாலஸ்தீனர்கள் மீது கருணை புரிவானாக! இதிலிருந்து இப்பொழுது (அந்த) மண்டலத்திலும் போர் பரவுவதற்கான அபாயம் உள்ளது என்று கூற ஆரம்பித்து விட்டனர். பிறகு, உலகப் போரும் உருவாகலாம். இவர்கள் பேரூதுக்கு அக்கம் பக்கமும் குண்டுகள் வீச ஆரம்பித்து விட்டனர். இப்பொழுது இவர்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். வெளிப்படையாக அமெரிக்க அரசு இவர்களிடம், 'உங்கள் போரைக் குறிப்பிட்ட எல்லைக்குள் வைத்திருங்கள்' என்றுதான் கூறுகிறது. ஆனால், இவை வெறும் சொற்களாகவே தெரிகின்றன. இவர்களின் குரல்கள் அமுங்கிய குரல்களாக இருக்கின்றன.

கஸாவில் இருந்து பாலஸ்தீனர்களை விரட்டியடித்து, அந்த மண்ணையும் கைப்பற்றுவதுதான் இவர்களின் முக்கிய திட்டமாகத் தெரிகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் பாலஸ்தீனத்து மக்கள் மீது கருணை புரிவானாக! முஸ்லிம்கள் மீதும் கருணை புரிவானாக! இவர்களுக்கும் அறிவையும் புரிதலையும் வழங்குவானாக! இவர்கள் இதன் பக்கமும் கவனம் செலுத்துவார்களாக! அதாவது, காலத்தின் இமாமின் ஓசையையும் இவர்கள் கேட்பார்களாக! அவரை ஏற்றுக் கொள்வார்களாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ
فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ
بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ
لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**